Registered as a Newspaper in Ceylon * * விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் 9
போன் : 389

National Tamil Daily

இதழ் 50
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவ பங்குனி 18 ஜுல்ஹஜ் 20 சனிக்கிழமை [1-4-67]

எழில் மிகுந்த
முத்து வளையல்
பிளாஸ்டிக் வளையல்
றப்பர் வளையல்
நவீன முத்துமாலை
முடிமயிர்
ஜீவா
பாங்கிள்ஸ் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# தேசிய ஒற்றுமைக்கு தமிழரின் ஒத்துழைப்பு

## டாக்டர் மலலசேகரா நம்பிக்கை

வட்டுக்கோட்டை, வெள்ளி

'சமூகத்தில் மாறுதல் ஏற்பட்டுவரும் காலம் இது. இச்சமயத்தில் சிறிது கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இந்நாட்டில் வாழும் சகல இன, மத மக்களும் ஒன்றுசேர்ந்து உழைத்து இந்நாடு சுபீட்சப் பாதையில் செல்லும் காலம் வெகுதூரத்தில்இல்லை'

இவ்வாறு உயர் கல்விக்கான தேசிய கல்விச்சபையின் தலைவர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா நேற்றுமாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

நாட்டில் உணவு நெருக்கடி ஏற்பட்டதும் எல்லோரும் ஒன்று சேர்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்கமுன் வந்ததுபோல் நாட்டின் நலனையும் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு ஒத்துழைக்கும்காலம் விரைவில் வருமென்றும் அப்போது இன, மத பாகுபாடுகள் நீங்கி இலங்கையர் என்ற ஒரே மனப்பான்மைதான் இங்கு நிலவுமென்றும் டாக்டர் மலலசேகரா நம்பிக்கைதெரிவித்தார்.

தேசிய ஒற்றுமையினுல்தான் நாடு முன்னேற முடியுமென்றும் இந்த ஒற்றுமைவிரைவில்ஏற்படுமென்றும் அவர் சொன்னர். யாழ்ப்பாண மக்களின் உழைப்பிலும், அறிவிலும், ஆற்றலிலும் தமக்கு அதிக நம்பிக்கையிருக்கிறதென்றும், அவர் சொன்னர்.

## 'நயினதீவு ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரிவேண்டும்'

நயினதீவு, வெள்ளி

நயினதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு வைத்திய அதிகாரியொருவரை நியமித்துத் தரும்படி சுகாதார இலாகாவை பல தடவைகளில் கோரியும், இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம். இங்குள்ள பல பொதுஸ்தாபனங்கள் வைத்திய அதிகாரியை நியமிக்கும்படி கேட்டு, மகஜர்கள் மூலம் சுகாதாரமந்திரியைக் கோரியிருந்தனர். இதுசம்பந்தமாக நயினதீவு தெற்கு கிராமமுன்னேற்றச்சங்கம் சுகாதாரமந்திரிக்கு மீண்டும் வைத்திய அதிகாரி ஒருவரை நியமித்துத்தரும்படி அவசரக்கடிதம் ஒன்றின் மூலம் கேட்டிருக்கிறது.

நயினதீவு ஆஸ்பத்திரிக்கு வைத்தியஅதிகாரி ஒருவர் நியமிக்கப்படாததால், இப்பகுதியிலுள்ள நோயாளர்கள் பெருத்த அவஸ்தைக்குள்ளாகின்றனரென்றும், இதனுல் யாழ்ப்பாணத்துக்குச் சென்று சிகிச்சைபெற வேண்டியநிலையிலிருக்கின்றனரென்றும் சுகாதார மந்திரிக்கு அனுப்பியுள்ளற் கடிதத்தில் கிராமமுன்னேற்றச்சங்கம்தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கில்

## சிங்களத் தந்திகளை ஏற்காத அஞ்சல் நிலைய விபரங்கள்

### தபால் தந்தி மந்திரியிடம் மாத்தறை எம. பி. கேள்வி

கொழும்பு, வெள்ளி

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சிங்களத் தந்திகளை ஏற்றுக்கொள்ளாத அஞ்சல் நிலையங்கள் சம்பந்தமாக மாத்தறை எம்.பி. திரு.பி.வை. துடாவே தபால் தந்தி போக்குவரத்து மந்திரியைக் கோரவிருக்கிறர்.

ஏப்ரல் 4ல்பார்லிமெண்ட் கூடும்போது தபால், தந்தி, போக்குவரத்து மந்திரியை இது சம்பந்தமாகக் கேட்பதற்கு திரு. துடாவே முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். கேட்பதற்காக முன்னறிவித்தல் கொடுத்திருக்கும் கேள்விகள் வருமாறு

வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களத்தந்திகளை ஏற்றுக்கொள்ளாதபல அஞ்சல் நிலையங்கள் உண்டென்பதை மந்திரி அறிவாரா?

அத்தகைய அஞ்சல்நிலையங்களின் பெயரடங்கிய பட்டியலொன்றை சமர்ப்பிப்பாரா?

இவ்விரு அஞ்சல் நிலையங்களில் சிங்களத்தில் செயலாற்றத்தேவைப்படும்உத்தியோகத்தர்களை நியமிக்க நடவடிக்கைஎடுப்பாரா? ஆம்எனில் என்று தொடக்கம்? இல்லையெனில் ஏன்?

## சாரதி லைசெனஸ்'பெறுவதில் மனுதார் கஷ்டம்

### போதிய பரிசோதகர் இல்லையாம்

யாழ்ப்பாணம், சனி

யாழ் மோட்டார் போக்குவரத்து காரியாலயத்தில் சாரதி விண்ணப்பத்திற்கான மனுக்கள் பெருமளவில் தமதிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

தினமும் பல சாரதி மனுக்கள் காரியாலயத்தில் வந்து சேருவதாகவும் இம் மனுதார்களை பரிசோதனை செய்வதற்காக வேண்டிய பரிசோதகர்கள் இல்லாததால் இத்தாமதம் ஏற்படுவதாகவும் தெரிகிறது.

இரு மோட்டார் வாகனப் பரிசோதகர் கடமையாற்றி வந்த காரியாலயத்தில் தற்பொழுது ஒரு மோட்டார் பரிசோதகரே தொழில் பார்த்து வருகின்றார். இதன் காரணமாக நாளொன்றிற்கு பத்து பேர்களே பரிசோதனை செய்யப்படுகின்றனர்.

இப் பிரிவில் தற்பொழுது ஓர் உத்தியோகத்தரே நாளாந்த வேலைகளை கவனிப்பதால் காரியாலய வேலைகளும் பெரிதும் தாமதிக்கப்பட்டுள்ளதாம்.

## ஆராய்ச்சி நடக்கிறது

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஊர்காவற்றுறையில் மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு கடற் தொழிற் பகுதியினர் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

காரைநகர், ஊர்காவற்றுறைக் கடலின் ஆழத்தைப் பரீட்சித்துப் பார்த்துள்ளனர்.

## தாராசிங்குக்கு சவான் எச்சரிக்கை

புதுடில்லி, மார்ச் 21

மாஸ்டர் தாராசிங்கின் சீக்கிய தாயகத்திற்கான கோரிக்கைக்கு சீக்கிய மக்களிடையேஅதிக ஆதரவில்லை என்பது தேர்தலின்போது தெளிதாகிவிட்டதெனவும், இதுவிஷயத்தில் தாராசிங் எடுக்கும் முயற்சிக்கெதிராக அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்குமெனவும் உள்துறை மந்திரி திரு. சவான் இன்று ராஜ்ய சபாவில் எடுத்துக் கூறினர்.

பிரிவினைக் கோரிக்கைக்குக் கடுமையான ஆட்சேபம் தெரிவித்த அவர் நாகாலந்திலும் இவ்வித பிரிவினை முயற்சி மேற்கொள்பவர்களுக்கெதிராக அரசாங்கம் ஏற்ற நடவடிக்கை எடுக்கும் என எச்சரிக்கைசெய்தார்.

## வங்கி ஊழியர் இன்றுதிருமபுகிறர்கள்

கொழும்பு, சனி

வங்கிஊழியரின் ஐம்பத்தொன்பதுநாள் வேலைநிறுத்தம் நேற்றுடன் முடிவடைந்தது. வேலைநிறுத்தத்திலீடுபட்டுவந்த சுமார் 1200 வங்கி ஊழியர்இன்றுவேலைக்குத் திருமபுகிறர்கள்.

சம்பள உயர்வு, போனஸ், பென்ஷன் அலவன்ஸ், விடுமுறை ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து இவர்கள் வேலைநிறுத்தத்தி லீடுபட்டிருந்தார்கள்.

மீன்பிடித் துறைமுகம் ஒன்றை அமைத்துத்தருமாறு ஊர்காவற்றுறைப் பகுதி மீனவர்கள் நீண்டகாலமாகக் கேட்டுவருகின்றனர்.

## நெடுந்தீவுக்கு புதிய இயந்திரப்படகு வருகிறது

யாழ்ப்பாணம், சனி

நெடுந்தீவுபிரயாணிகளின் கஷ்டத்தைப் போக்குவதற்கு இம்மாதம் 10-ந் திகதி புதிய இயந்திரப்படகு ஒன்று வரவிருக்கிறது.

படகுகள் பழுதடைந்ததால் நெடுந்தீவுப்பிரயாணிகள் சொல்லொணுக் கஷ்டம் அனுபவிப்பதாக சம்பந்தப்பட்ட அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியை சந்தித்துப் பேசிய தீவுப்பகுதி எம். பி. திரு. வ நவரத்தினம் எடுத்துக்கூறினர். நெடுந்தீவுப் பிரயாணிகளின் கஷ்டம்பற்றி கடிதங்களும் எழுதியிருந்தார்.

நிரந்தரக்காரியதரிசி, திரு. நவரத்தினத்துக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில புதிய இயத்திரப்படகு பரீட்சார்த்தமாக ஓடப்பட்டுவருவதாகவும் இம்மாதம் பத்தாம் திகதி நெடுந்தீவுக்கு வந்துசேருமென்றும் தெரிவித்திருந்தார். பழுதடைந்த படகுகளும் விரைவில் திருத்தப்பட்டு அனுப்பப்படுமென்றும் அவர் அறிவித்திருக்கிறர்.

## பின் போடப்பட்டது

கொழும்பு, வெள்ளி

தொலைபேசி ஒற்றுக்கேட்பது சம்பந்தமாக விசாரித்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைகுழு அறிக்கை சமர்ப்பிப்பதற்கானகாலத்தை மகாதேசாதிபதி பின் போட்டுள்ளார். மே 31ம் திகதிவரை அறிக்கை சமர்ப்பிப்பதற்கான திகதி பின்போடப்பட்டுள்ளது.

## வர்த்தகர்களுக்கு முதலமைச்சர் உறுதி

சென்னை, மார்ச் 31

வர்த்தக சமூகத்தின் தேவைகளையும், பிரச்னைகளையும் தீர்த்து வைப்பதற்கு தமிழ்நாடு அரசாங்கம் சகல ஒத்துழைப்புகளையும் நல்குமென்று தமிழ்நாடு முதலமைச்சர்திரு. ஸி. என் அண்ணுதுரை உறுதி தெரிவித்தார்.

வர்த்தக சங்கங்கள் தமிழ்நாடு முதலமைச்சருக்கும், இதரமந்திரிகளுக்கும் விருந்துபசாரமொன்றை அளித்தது.

அவ்விருந்துபசாரத்தில் முதலமைச்சர்அண்ணுதுரை மேலும் பேசுகையில் கூறியதாவது:-

முன்னைய தமிழ்நாடு அரசாங்கம் மேலதிக பணத்தை பாங்கிலிருந்து பெற்றிருந்தது இப்போது அது சரிசெய்யப்பட்டு விட்டது. இனி இப்படியான நிலைமை ஏற்படாத வண்ணம் நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மற்றும்பல மந்திரிகளும் உரை நிகழ்த்தினர்.

## ரூ. 25 லட்சம் கடனுதவி

புதுடில்லி, மார்ச் 31

மத்திய அரசாங்கம் உத்தர பிரதேசத்துக்கு 25 லட்சம் ரூபாய் கடனுதவி அளிப்பதென முடிவுசெய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கசப்பு, புளிப்பு, துவர்ப்புப் போன்ற காமம், மோகம், கோபம் எல்லாம் நம் மனதிலே, காய்களில் இருப்பது போல் ஆரம்பத்தில் இருக்கத்தான் வேண்டும். இருப்பதனால் கெடுதி இல்லை. மனம்பக்குவம் அடைந்தவுடன், யார் எப்படி நடந்தாலும் கோபமோ துக்கமோ வராமல் சதா கருணையோடு ஆனந்தமாக இருக்கும் தன்மையை அடைகிறார்கள்.

— ஸ்ரீ காஞ்சி ஆசாரிய சுவாமிகள்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஹூ பங்குனி மீ 18உ (1-4-67)

## யாழ்ப்பாணத்தின் தண்ணீர் பிரச்னை

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே வரவர மழை குறைந்து வருவதாயும் அதனால் பூமிக்கடியிலுள்ள நல்ல தண்ணீரை மட்டாகப் பாவிக்க வேண்டுமென்றும் இன்றேல், இது ஒரு பாலைவனமாகிவிடலாமென்றும் இஸ்ரேல் நாட்டிலிருந்து வந்த ஒரு நிபுணர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக வந்து நம்மைப் பயமுறுத்திச் சென்றார்.

அந்த எச்சரிக்கையின் பின் அரசாங்கம் இரு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஒன்று குடாநாட்டிலே 400 கிணறுகளைத் தெரிவு செய்து, அதன் நீர் மட்ட அளவையும், தண்ணீரிலுள்ள உப்பு அதிகரிக்கிறதா என்பதையும் பார்க்கும்படி [illegible]கர்களுக்கும் [illegible] காரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளது. சென்ற இரண்டு வருடங்களில் கண்ட புள்ளி விவரங்களை சில நிபுணர்கள் இப்போது ஆராய்ந்து வருகின்றார்கள். இதன் முடிவு இன்னும் தெரியவில்லை.

இங்கு நீர்ப்பாசனத்துக்காகப் புதிய கிணறுகளை வெட்டுவதற்கு அரசாங்கம் உதவிப் பணம் கொடுக்காமல் நிறுத்தி வைத்துள்ளது மற்றொரு நடவடிக்கை. ஆனால் பணமுள்ளவர்கள் தங்கள் காணிகளில் எவ்வளவு புதிய கிணறுகளும் வெட்டிக் கொள்ள முடியும்போது, ஏழைகளுக்கு மட்டும் ஏன் உதவி மறுக்க வேண்டும்? இப்படி மறுப்பது வேற்றுமை நடவடிக்கையாவதுடன், ஏழை விவசாயிகளை வீணாக இம்சை செய்வதாகும். ஆகவே இந்தத் தடையை அரசாங்கம் உடன் ரத்துச்செய்து பழையபடி கிணறு வெட்ட உதவி அளிக்க வேண்டும்.

மேலும் அதிக காணிகளில் சாகுபடி செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய சமயம் இது. ஆகவே நீர்ப்பாசனத்துக்கு வரவர அதிக தண்ணீர் தேவை. இதேசமயம் யாழ்ப்பாணப் பட்டணத்துக்குக் குடிதண்ணீர்த் தேவையும் அதிகரித்து இப்போதுள்ள இரு கிணறுகளும் போதாமலுள்ளனவாம். ஒரு நாளைக்கு இரண்டரை லட்சம் கலன் தண்ணீர் வரை இப்போது நகர குழாய்கள் மூலம் விநியோகமாவதாயும், இத்தேவையும் கூடிக் கொண்டு போவதால், இதையும் சமாளிக்க வேண்டியிருப்பதாயும் தெரிகிறது. ஆகவே இங்கு நீர்ப்பாசனம், குடிதண்ணீர் இவற்றுக்குத் தட்டாமல் அதிக தண்ணீர் பெற வேண்டிய பிரச்னை அவசரமாகின்றது.

இதற்கு இரண்டே வழிகள் உண்டு. ஒன்று பெய்யும் மழைநீர், கடலில் கலந்து வீணாகாமல் கூடிய அளவு தடுத்து பாதுகாக்க வேண்டும். மற்றது மகாவலி கங்கையை வடக்கே குடாநாட்டுக்கு திருப்ப வேண்டும். ஆங்காங்கே முன் போல் பெரிய குளங்களை வெட்டினால், மழைத் தண்ணீர் வீணாவதை ஓரளவு தடுக்கலாம். இதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லையாதலால், இங்கு தூர்ந்துவிட்ட பழைய குளங்களையும் கிணறுகளையும் மீண்டும் வெட்டும்படியான வேலையை அரசாங்கமும் பொதுமக்களும் ஒத்துழைத்து ஆரம்பிக்க வேண்டியது மிக அவசரப் பணியாகின்றது. சிரமதானமாகவும் இதை நடத்தலாம். இதேசமயம் மகாவலிகங்கையையும் இந்தப்பக்கம் திருப்புவதில் நமது எம். பி மார்கள் அதிக ஊக்கம் காட்ட வேண்டும். மழை பெய்யும்படி செய்வது நமது கையிலில்லை. ஆனால் பெய்யும் மழைத் தண்ணீரை முற்றிலும் பாதுகாத்து, பயன்படச் செய்வதும் தென்பகுதியில் அதிகப்படியாக கடலில் வீணாகும் நீரை இங்கு திருப்பி உபயோகமாகும்படி செய்வதும், அரசாங்கம் மனம்வைத்தால் நிச்சயம் முடியும். தேசிய அரசாங்கம் இதைச் செய்து தமிழரின் அபிமானத்தைப் பெறுவதால், நாட்டின் ஒற்றுமை பலப்படுவதுடன், உணவுப் பிரச்னையும் தீர வழி பிறக்கும்.

யாழ்ப்பாணக்குடாநாட்டில்

# தரை நீர் ஆராய்ச்சிகள் கிணற்று நீரில் உப்புத் தன்மை

**ஓய்வுபெற்ற உதவி நீர்ப்பாசன அதிபர் திரு. எஸ். ஆறுமுகர் (தலைவர்) அவர்களையும் நில அளவைப் பகுதி நிலவியல் நிபுணர்கள் திரு. சி. எச். எல். சிறிமான்னே அவர்களையும் திரு. வி எஸ், பாலேந்திரன் அவர்களையும் கொண்ட ஆராய்ச்சிக்குழு விடுத்துள்ள ஓர் அறிக்கை.**

இஸ்ரவேல் தேசத்து நில ஆராய்ச்சிப் பிரிவைச் சேர்ந்த நீரியல் ஆராய்ச்சியாளரான டாக்டர் ஆர்னன் அரத் என்பவரின் யோசனையின் பேரில் 1965-ம் ஆண்டு முற்பகுதியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் நில மட்டத்துக்குக் கீழிருக்கும் நீரோட்டங்களைப் பற்றிய ஆராய்ச்சி ஆரம்பித்தது.

நிலத்துக்குக் கீழேயுள்ள நீரின் தன்மையையும் அதன் அளவையும் கண்டுபிடித்து விவசாய அபிவிருத்தியில் அதைப் பயன் படுத்துவதே அதன் நோக்கமாகும்.

முதலாவதாக, பற்பல இடங்களிலுள்ள வெவ்வேறு கிணறுகளிலுள்ள தண்ணீர் விஞ்ஞான ரீதியாக ஆராயப்பட்டது.

குடாநாட்டில் எல்லாப்பகுதிகளிலுமுள்ள நாநூறுக்கு மேற்பட்ட கிணறுகள் அவதானிப்புக்காக தெரிவுசெய்யப்பட்டன. சராசரி கடல் மட்டத்துக்கும் மேற்படி கிணறுகளின் மேல்நீர் மட்டத்துக்குமுள்ள வித்தியாசத்தையும், கிணற்று நீரின் உவர்த்தன்மை, தடிப்பு முதலியவற்றையும் ஆராய்ந்தார்கள்.

இவ்வாராய்ச்சியின் பெறுபேறுகள் பின்வருமாறு:-

1. வருடந்தோறும் நிலத்துக்குள் உறிஞ்சப்படும் மழைநீரின் அளவு.
2. நிலச்சுரங்க வாயிலாக கடலுக்குள் செல்லும் நீரின் அளவு.
3. நீர்ப்பாசனத்துக்குக் கிடைக்கும் தரையிலுள்ள நீர்.
4. நிலத்துக்குள் சுவறக் கூடிய உப்புத்தன்மை.
5. உப்புத்தன்மை சுவறும் திசை அல்லது மூலஸ்தானமும் சுவறும் நேரமும்.

1965-ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஆதார விபரங்கள் சேகரிக்கப்பட்டன. ஆனால் அவ்வருடத்தில் எதிர்பாராத விதமாக அகால மழை பெய்ததால் பொதுப்படையாகக் கூறக்கூடிய புள்ளி விபரங்களை சேகரிக்க முடியவில்லை.

### 1965-ல் தரை நீர் ஏற்றத்தாழ்வு

விசேஷ தன்மையுள்ள சில கிணறுகளைத் தவிர்த்து, பெரும்பாலான கிணறுகளிலுள்ள நீர்மட்டம் 1965-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் கடல்மட்டத்துக்கு 2அடிக்கு மேல் காணப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் கிணற்று நீர் மட்டம் ஓரடி குறைந்த போதிலும், அம்மாதத்தில் பெய்த 3 அங்குல மழையின் காரணமாக 2 அடிக்கு மேல் திடீரென உயர்ந்து, மறுபடியும் வேகமாகக் குறைந்து ஆகஸ்ட் மாதத்தில் கிட்டத்தட்ட கடல் மட்டத்தை எட்டியது. ஆகஸ்டில் பெய்த 4 அங்குல மழையினால் மட்டம் மேலும் உயர்ந்ததானாலும் ஒக்டோபர் மாதம் வரை படிப்படியாகக் குறைந்து கொண்டே போனது. ஒக்டோபரில் மழைக்காலம் தொடங்கியதும் நீர் மட்டம் ஏறத்தொடங்கியது.

### நீரிலுள்ள உப்புத்தன்மை

நீர்மட்ட ஏற்றத்தாழ்வுகளினால் நீரின் தன்மை பின்கண்ட மாறுதல்களை அடைந்தது -

[அ] ஆகஸ்ட் மாதத்திலேயே உப்புத்தன்மை உச்சத்தை எட்டியது. மழை பெய்தவுடன் அது வர வரக் குறைந்து மார்ச் மாதத்தில் நீர் மட்டம் குறையும்போது உப்புத்தன்மை கொஞ்சம் கொஞ்சமாக ஏறத்தொடங்குகிறது.

[ஆ] நீர் மட்டம் ஜனவரி மாதத்தில் ஆக உச்சியை அடைந்ததும் உப்புத் தன்மை அதிகரிக்கத் தொடங்கி மாதம் முடிவில் குறையும்.

[இ] நீர்மட்டம் உயர உப்புத்தன்மையும் அதிகரித்து நவம்பரில் உச்சியை அடைகிறது. இது மார்ச் மாதம்வரை படிப்படியாகக் குறைந்து மீண்டும் அதிகரிக்கத்தொடங்கும்.

[ஈ] நீர் மட்டம் உச்சியில் இருக்கும்போது உப்புத் தன்மையும் உச்சநிலையில் இருக்கும். மார்ச் மாதத்தில் மீண்டும் உப்புத்தன்மை ஏறத்தொடங்கும்.

சுன்னாகம், காங்கேசன் துறை முதலிய பகுதிகள் [அ] பிரிவிலும், மானிப்பாய், சங்கானை முதலிய பகுதிகள் [ஆ] பிரிவிலும், அரியாலை, கோப்பாய் பகுதிகள் [இ] பிரிவிலும், ஊரெழு, குரும்பசிட்டி பகுதிகள் [ஈ] பிரிவிலும் அடங்கும். வட்டுக் கோட்டையும் [ஈ] பிரிவைச் சேர்ந்தது.

1965-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் இவ்வாராய்ச்சிகள் தொடங்கியபோதிலும், இடையில் தடைப்பட்டுவிட்டன. 1967 மார்ச் மாதத்தில் ஒரு முழு வருடத்தில் சேகரித்த ஆதார விபரங்கள் வந்துகொண்டிருக்கின்றன.

—

### புதுவருட களியாட்ட விழா

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் உடுப்பிட்டித்தொகுதி மக்களுக்கு புதுவருட களியாட்டவிழா வொன்றை பெரிய அளவில் நடாத்த முடிவுசெய்துள்ளார். உடுப்பிட்டி வாலிப முன்னணி ஆதரவில் நடைபெறவிருக்கும் இக்களியாட்ட விழா எதிர்வரும் 11-ந்திகதி முதல் 15-ந்திகதி வரை கரவெட்டியில் நடைபெறும். 15-ந்திகதி மாலை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறும் பரிசளிப்புவிழா உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தலைமையில் நிகழும். தேசியசேவை விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. வி. ஏ. சுகததாஸாவும், தமிழ்க் காங்கிரஸ்கட்சித்தலைவரும், யாழ்ப்பாணம் எம். பி. யுமான திரு. ஜி. ஜி. பொன்னம்பலமும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வார்கள்.

—

### கல்கத்தா சம்பவங்கள்

**நீதி விசாரணை நடக்கும்**

கல்கத்தா, மார்ச்31

கல்கத்தா சம்பவங்கள் குறித்து நீதிவிசாரணை நடாத்துவதற்கு மேற்கு வங்காள அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

இந்துக்களை மற்ற சமயங்களுக்கு மத மாற்றம் செய்வதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கை எடுப்பதென்று சென்னையில் கூடிய விசுவ இந்து பரிஷ ஒரு முக்கிய தீர்மானம் செய்துள்ளது.

ஏற்கெனவே மதம் மாற்றப்பட்டவர்கள். மீண்டும் இந்துக்களாக விரும்பினால், அவர்களை முறைப்படி ஏற்றுக்கொள்ளுவதென்றும், இந்துக்கள் ஒருக்காலும் பதிதர்களாகச் சமூகத்தை விட்டு ஒதுக்கப்படமாட்டார்கள் என்று பொருள்படும் 'இந்துர் நா பதிதோ பவேத்' என்ற புதிய லட்சியத்தை இனிக் கொள்ளுவதென்றும் பெரிய ஆசாரியர்களும், தர்மகுருமார்களும் அடங்கிய இந்த மகாசபை தீர்மானித்திருப்பது நல்ல காரியமாகும்.

இத்துடனே இந்துப் பொதுமக்களிடையே கூட்டுப்பிரார்த்தனை, சமூக திருவிழாககள், நாம பஜனை முதலியவற்றைப் பெருமளவில் பரப்புவதுடன், கடல் கடந்துவாழும் இந்துக்களும் தங்கள் ஆசார அனுஷ்டானங்களையும், சமய நம்பிக்கைகளையும் கடைப்பிடிக்க உதவி, பிரசாரகர்களைப் பல நாடுகளுக்கும் அனுப்புவதென்றும், அவசியமாயின் அவர்களுக்காகக் கோவில்களையும், சமய ஸ்தாபனங்களையும் ஏற்படுத்துவதென்றும் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன.

ஃ ஃ ஃ

தீண்டாமை முதலிய சமூகக் கொடுமைகளே மதமாற்றத்துக்கு முக்கிய காரணமாக இருந்துவந்துள்ளது. இந்தக் கொடுமைகள் நீடித்தால், இந்து சமூகம் அழிந்துவிடுமென்று மகாத்மா காந்தி முதல், உடுப்பிட்டிப் பிரதிநிதிவரை எச்சரிக்கை செய்திருக்கிறார்கள். ஓர் ஆண் ஒழுக்கம் தவறினால் கேள்வி முறையில்லை. சமூகத்திலே கண்யமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். ஆனால் ஒரு பெண் தவறிவிட்டாலோ, எல்லாம் முடிந்தது. தற்கொலை அல்லது மதமாற்றம்தான் அவர்களுக்கு வழி. செய்தபிழையை மன்னித்து அவர்களுக்கும் இந்து சமுதாயத்திலே உயர்வுண்டு என்றும், அவர்கள் ஒதுக்கப்படமாட்டார்கள் என்றும், புதுவாழ்வு வாழலாமென்றும் பெரியகுருமார்களே கருணையுடன் இப்போது தீர்மானித்திருப்பது இந்து சரித்திரத்திலேயே பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும்.

ஃ ஃ ஃ

பலாத்காரமாகவோ, பயந்தோ, ஏமாற்றப்பட்டோ, ஆசை காட்டியோ தப்பெண்ணத்துடனோ அறியாமையாலோ இந்துசமயத்திலிருந்து மாற்றப்பட்டவர்கள் மீண்டும் இந்து சமூகத்திலே சேர விரும்புவதாயின் அவர்களுக்கு சுலபமான ஒரு பிராயச்சித்தம் செய்து அத்தாட்சிப்பத்திரம் வழங்குவதென்றும் முடிவுசெய்துள்ளனர்.

சில இந்து ஆலயங்களுக்கும் ஆதீனங்களுக்கும் ஏராளமான சொத்துக்களும் வருமானங்களுமுள்ளன. அதைக்கொண்டு பலபல சமூகக் குறைகளையும் தீர்ப்பதாயின் எவ்வளவோ புண்ணியமாகும்.

ஃ ஃ ஃ

இந்துக்கள், ஜைனர்கள், பௌத்தர்கள், வீரசைவர்கள், சீக்கியர் முதலியோர் சேர்ந்து விஜயதசமி தீபாவளி, விசாகம், குருபூர்ணமா, சங்கராந்தி முதலிய

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

வற்றைச் சேர்ந்து கொண்டாட வேண்டுமென்றும் தைப்பொங்கல் பெருநாளை உலகமெல்லாம், ''விசுவ இந்து கல்யாணதினம்'' என்று எல்லா பஞ்சாங்கங்களிலும் குறிப்பிட்டு சமூகப் பெருவிழாவாகக் கொண்டாட வேண்டுமென்றும் மேற்குறித்த சபை தீர்மானித்துள்ளது இவை வெறும் பேச்சில் முடியாமல், சிலவற்றையாவது கைக்கொண்டால் இந்து சமூகம் மீண்டும் புத்துயிர் பெற்று உலகம் மதிக்கும் முறையில் தலைநிமிர்ந்து வாழமுடியும்.

ஃ ஃ ஃ

அல்லலென் செயும்
அருவினை யென் செயும்,
தொல்லை வல்வினைத்
தொடர்ந்தானென் செயும்,
தில்லை மாநகர்ச் சிற்றம்
பலவனார்க்கு
எல்லையில்லதோர் அடிமை
பூண்டேனுக்கே.

— அப்பர் சுவாமிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை மாகாணம் தமிழ்நாடாக வேண்டும்

## சட்ட சபையில் ம. பொ. சி

சென்னை, மார்ச் 31

'சென்னை மாகாணம் தமிழ் நாடு என்று மாற்றப்படவேண்டும். தமிழகத்தில் போனு மொழியைப் பொறுத்தவரை, ஆங்கிலத்துக்கு உரிமையும், தமிழுக்கு சலுகையும் என்ற நிலை இருக்கிறது. இந்த இழுக்கைப் போக்கி தமிழுக்கு உரிமை அளிக்கப்படவேண்டும்' என்று சட்ட சபையில் தமிழரசுக் கழகத் தலைவர் ம. பொ. சிவஞானகிராமணியார் கூறினர்.

கவர்னர் உரைமீதான விவாதத்தில் அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இப்போது மாகாணங்களுக்கு போதியளவு அதிகாரங்களில்லாததால், எதற்கும் மத்திய அரசாங்கத்திடமே கையேந்தும் நிலையில் இருக்கிறது. ஆகவே மாகாணங்களுக்கு அதிக அதிகாரங்கள் பெற முயலவேண்டும்.

உணவுப் பிரச்னையைப் பொறுத்தவரை ரூபாய்க்கு 3 படி அரிசி வேண்டும் என்பது ஆசைதான். ஆனல் அது அறிவை ஒட்டி வரவேண்டும். அதற்கு ஏற்ற சூழ்நிலை இருக்கிறதா என்று பார்க்கவேண்டும். ஆகவே இவ்விஷயத்தில் கட்சிப்பாகுபாடு இன்றிப் பாடுபடவேண்டும். ''எனக்கும் முதலமைச்சருக்கு மிடையில் உள்ள இடைவெளி இங்கு அதிகமென்ருலும் உணவுக் கொள்கை, மொழிக் கொள்கை ஆகியவற்றில் நாம் ஒன்று பட்டவர்கள். இதே தோழமை என்றும் நீடிக்கும்.''

# 'பேச்சு வார்த்தை திருப்தி அளிக்கிறது'

## பிரதமர், மந்திரிகள்சந்திப்பின் பின்கேரளமுதன்மந்திரி சொன்னா'

புதுடில்லி, மார்ச் 31

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா, துணைப்பிரதமர் மொரார்ஜி தேசாய், மற்றும் மத்திய மந்திரிகள் பலரையும் சந்தித்து, பல்வேறு விஷயங்கள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தியதாக கேரள முதன்மந்திரி திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை திருப்தியாகவும் பலவிதத்திலும் நன்மையளிக்கக்கூடியதாகவும் இருந்ததாகவும் அவர் நிருபர்கள் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

கேரளத்தின் உணவுப் பிரச்னை மற்றும் மதுவிலக்குரத்து உட்பட பல விஷயங்கள் பற்றிப் பேசியதாக நம்பூதிரிபாத் சொன்னர்.

கேரளத்துக்கும் மத்திய அரசாங்கத்துக்கும். உள்ள தொடர்பு பேச்சுவார்த்தையால்மேலும் பலவிதத்திலும் நெருக்கத்தை ஏற்படக்கூடிய விதத்தில் நல்ல உறவு நிலையை உருவாக்கிவிட்டதென்றும் கேரளமுதன் மந்திரி கூறினர்.

நடிகர்

# ராதா வழக்கு சென்னைக்கு வெளியே நடக்குமா?

புதுடில்லி, மார்ச் 31

சினிமா நடிகரும், தமிழக சட்டசபை அங்கத்தவருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரனைக் கொலை செய்ய முயன்றதாக நடிகர் எம். ஆர். ராதா மீது சைதாப் பேட்டை சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்டுள்ள வழக்கை சென்னை ராஜ்யத்துக்கு வெளியே வேறு எந்த கோர்ட்டுக்காவது மாற்றவேண்டுமென்று எம். ஆர். ராதா சுப்ரீம் கோர்ட்டில் ஒரு மனுவைத் தாக்கல் செய்துள்ளார். அதன்மீது சென்னை அரசாங்கத்திற்கு நோட்டீஸ் பிறப்பிக்குமாறு சுப்ரீம் கோர்ட் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த மனுவை விசாரணை செய்யும்வரை, சைதாப் பேட்டை சப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்கு விசாரணை நடைபெறக்கூடாதென்று இடைக்காலத் தடையை சுப்ரீம் கோர்ட் விதித்துள்ளது.

# எம். ஜி. ஆர். வராததால் விசாரணை ஒத்திவைப்பு

சென்னை, மார்ச் 31

நடிகர் எம். ஜி. ராமச்சந்திரனைச் சுட்டதாக எம். ஆர் ராதா மீது தொடரப்பட்டுள்ள வழக்கின் விசாரணையை சைதாப் பேட்டை சப் மாஜிஸ்திரேட் திரு. குப்புசாமி ஏடரல் 12-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

முதல் சாட்சியான நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் சிகிச்சைபெற்று வருவதனல் கோர்ட்டுக்கு வரமுடியவில்லை. ஆகவே விசாரணை 12-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. ராதாவின் காலமும் ஏப்ரல் 12-ம் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இரு சினிமா நடிகர்களின் ஆதரவாளர்களும் கோர்ட் கட்டிடத்தின் வெளியேயும் உள்ளேயும் விசாரணை தொடங்குமுன் கூடினர். ராதா கோர்ட்டுக்குக் கொண்டுவரப் படுகையில், அவருக்கு ஆதரவாகவும் எதிராகவும் கோஷங்களை எழுப்பினர்.

## 'ஓய்வு எடுத்துக் கொள்ளலாமே'!

பிரீடவுன், மார்ச் 31

வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்ட ஸியராலியோனின் முன்னுள் கவர்னர் ஜெனரலை வெளிநாட்டுக்குச் சென்று ஓய்வெடுத்துக் கொள்ளும்படி 'இரத்தம் சிந்தாத அமைதிப் புரட்சி' மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத்தினர் வற்புறுத்தியிருப்பதாகக் கூறப்பட்டது.

கேரள

## பாசன திட்டம்

திருவனந்தபுரம், மார்ச் 31

கேரளத்தில் 25 பாசனத் திட்டங்கள் உடனடியாக அமுல்நடத்தப்படவிருக்கின்றன. இதனுல் 1275 ஏக்கர் நிலம் பயனடைகிறது.

## இராணுவத்தினர் தொகை அதிகரிப்பு

ஜாகர்த்தா, மார்ச் 31

இந்தோனேஷிய ராணுவத்தின் தொகை இன்னும் பத்து ஆண்டுகளில் நாலரை லட்சத்துக்கு அதிகரிக்கப்படுமென்று இந்தோனேஷியாவின் பதில் ஜனதிபதி ஜெனரல் சுகார்டோ அறிவித்துள்ளார். 1976-ம் ஆண்டு இந்த அளவுக்கு ராணுவத்தினர் தொகை அதிகரிக்கப்பட்டு ராணுவம் பலமுள்ளசக்தியாக்கபபட்டு விடுமென அவர் தெரிவித்துள்ளார்.

1965-ம் ஆண்டுப் புரட்சியில் சம்பந்தப்பட்டவர்களென சுகர்ணேவின் மாளிகையில் வேலைசெய்த பத்து காவலாளிகள் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைசெய்யப்படுகிறது.

இதேசமயத்தில் சுகர்ணேவுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்கள் வெளியாகியுள்ளதாகவும், இதற்கு வெளிநாட்டுப்பணம் உபயோகப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டது.

## புதுச்சேரி சபாநாயகர்

புதுடில்லி மார்ச் 31

புதுச்சேரி ராஜ்ய சட்டசபையில் சபாநாயகராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. வி. சண்முகம் என்பவர் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்ருர்.

30பேர்உள்ள இந்த சட்டசபையில் திரு. சண்முகத்திற்கு 17 வாக்குகளும் எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு 13 வாக்குகளும் கிடைத்தன.

ஆசிய-ஆபிக்க

## எழுத்தாளர் மகாநாடு

பெய்ரூட், மார்ச் 31

இங்கு நடைபெற்ற ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் மகாநாடு முடிவடைந்தது. 40 நாடுகளைச் சேர்ந்த 150 பிரதிநிதிகள்இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர். 1970-ம் ஆண்டு அடுத்த மகாநாட்டை டில்லியில் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

## தரை தட்டிய கப்பல்

### தீக்கிரையாக்கப்பட்டது

லண்டன், மார்ச் 30

இங்கிலாந்துக் கடலில் தரைதட்டி இரண்டாகப் பிளந்த 'டொரி கன்யன்' என்ற பெரிய எண்ணெய்க் கப்பல், நேற்று குண்டு போடப்பட்டு தீக்கிரையாக்கப் பட்டது. ஏறத்தாழ நாலரை மணித்தியாலமாக கப்பல் எரிந்து கொண்டிருந்தது. புகை 1,000 அடி உயரத்துக்கு மேல் சென்று பரவியது. கப்பலிலிருந்து வெளிப்பட்ட எண்ணெய், இங்கிலாந்துக் கடற்கரைகளுக்கு ஆபத்து விளைவிக்கும் முறையில் பரவத் தொடங்கியதைத் தொடர்ந்தே கப்பலைத் தீக்கிரையாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது

லண்டன், மார்ச் 31

கிரேக்க பிரதம மந்திரி தமது பதவியை ராஜினமாச் செய்திருப்பதாக [illegible] கப்பட்டது.

# ரூ. 45,000 பெறுமதியான வைரக்கல் பிடிபட்டது

## சென்னை மீனம்பாக்க விமான நிலையத்தில் கடத்த முயன்றவர் கைதானர்

சென்னை, மார்ச் 31

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் பெருந்தொகையான வைரக்கல் கடத்தல்முயற்சி முறியடிக்கப்பட்டது.

45,000 ரூபாய் பெறுமதியான வைரக் கல்லை ஒருவர் வைத்திருந்தார். அவரைச் சோதனையிட்ட விமான நிலைய அதிகாரிகள்இவ்வளவு பெறுமதியான வைரக்கல்லை வைத்திருப்பதைத் தெரிந்து கொண்டார்களாம். உடனடியாக இவர் கைது செய்யப்பட்டார்.

இவர் பினங்கிலிருந்து வந்திருந்ததாகக் கூறப்பட்டது.

# 2 லட்சம் ரூபா செலவில் நவீன சந்தை

## காங்கேசன் துறையில் அமைக்கப்படும்

பலாலி, வெள்ளி

காங்கேசன்துறைப் பட்டினசபையின் ஆதரவில் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் 1-ம் வட்டாரத்தில் நவீன சந்தை அமைக்கப்படவிருக்கிறது.

இதற்கான கேள்விப்பத்திரங்கள் விரைவில் பட்டின சபையால் கோரப்படவிருக்கின்றன. இந்த நவீன சர்தை இரண்டு மாடிகளைக் கொண்டதாக இருக்குமெனத்தெருவிக்கப்பட்டுள்ளது நவீன சந்தையொன்று அமைக்க வேண்டுமென காங்கேசன்துறைப் பட்டின சபையின் 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. சு. கிருபாமூர்த்தி பல தடவைகளில் வற்புறுத்தி வந்துள்ளார்.

## முத்திரை தட்டுப்பாடு

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் தபாற் கந்தோரில் முத்திரைக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. இதனுல் பொதுமக்கள் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளனர். கடந்த பல தினங்களாக ஒரு ரூபாய், ஐந்து சதமுத்திரைகள் பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கிறது.

## "ஆபத்து"

கோண்டாவில், வெள்ளி

கோண்டாவில் சைவப் பாடசாலை ஒழுங்கை, கலட்டி ஒழுங்கை ஆகிய இரண்டிலும் போடப்பட்டிருக்கும் மின் கம்பங்கள் தற்பொழுது பழுதடைந்து ஆபத்துத்தரக்கூடிய நிலையில் இருக்கின்றன. அத்துடன் அக் கம்பங்கள் ஊடாகச் செல்லும் மின் கம்பிகள் தளர்ந்து தரையை நோக்கிய வண்ணம் வந்து கொண்டிருக்கின்றன. இது பற்றி இவ்வட்டார உறுப்பினர் பல முறை கிராம சபைத் தலைவருக்கு முறையிட்டும், அவர் இதில் அக்கறையோ ஆர்வமோ செலுத்தவில்லை. இதைத் திருத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமாறு கோண்டாவில் மேற்கு வேதபாராயண சனசமூக நிலையத்தினர் உள்ளூராட்சி உதவியாணையாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இம் மகஜரின் பிரதிகள் யாழ். அரசாங்க அதிபருக்கும், யாழ். மாநில பொலிஸ் சுப்பிரிண்டனுக்கும், கொக்குவில் கிராமசபைத் தலைவருக்கும், கொக்குவில் கிராம சபை மின்சாரப்பொறுப்பதிகாரிக்கும் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

## பூடு இல்லையே

ஊர்சாவற்றுறை, வெள்ளி

ஊர்சாவற்றுறைப் பகுதியில் உள்ளிக்குக்கடுந்தட்டுப்பாடு நிலவுகிறது. இதனுல் பாவனையாளர்கள் பெரிதும் கஷ்டப்படுகிருர்கள்.

பல்லி விநியோகத்தை கூட்டித்தரவேண்டுமெனவும் மக்கள் கேட்கிருர்கள்.

## ஈழத்தோர் பருகும் இனியபானம்

யாழ்ப்பாணம். வெள்ளி

குளிர்ப் பெட்டியில் வைக்காமலேயே ஒரு வருடத்துக்கு மேல் பழுது படாமல் இருக்கக் கூடிய ஒரு புதிய மாதிரி பால் இப்பொழுது ஈழத்தில் பரவி வருகிறது. மெஸ்ஸேர்ஸ் டார்லி பட்லர் அன்ட் கொம்பனியாரால் விசேஷமாகத் தயாரிக்கப்பட்ட இந்த நவீன பானத்தின் பெயர் 'லோங் லைவ் மில்க்' [நீண்ட ஆயுள் பால்] என்பதாகும். கோப்பி, வனிலா, சொக்கலட் முதலிய தனித்தனி மணம் குணம் கொண்டதாய் இப்பால் சந்தேகம் கொள்பவர்களையும் எளிதில் கவர்ந்து விடுவதாகச் சொல்லப்படுகிறது.

நூற்றுக்கு நூறு உள்ளூர் தயாரிப்பான இந்தப்பால் மூலை முடுக்கிலுள்ள கடைகளிலும் காணப்படுகிறது. இதில் காணப்படும் நறுமணமும் நிறமும் இயற்கையாகவே அமைந்துள்ளவை. போலிகள் அல்ல. விலைகளும் சகாயம் என்று பொதுமக்கள் கூறிக் கொள்ளுகின்றனர்.

## தமிழறிஞர்கள் வருகிருர்கள்

ஊர்காவற்றுறை, சனி

இம்மாதம் புங்குடுதீவில் நடைபெறவிருக்கும் சைவ மகாநாட்டுக்கு தென்னிந்தியாவில் இருந்து திரு. சிங்கரவேலனர், முதலியார் நடேசபிள்ளை ஆகியோர் வருகிருர்கள்.

புங்குடுதீவு பெருங்காடு ஆலய முன்றலில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டை புங்குடுதீவு சைவ கலா மன்றம் ஏற்பாடுசெய்துள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறவிருக்கும் இம்மகாநாட்டில் ஈழத்துத் தமிழ் அறிஞர்களும் கலந்து கொள்கிருர்கள்.

மகாநாட்டைச் சிறப்பாக நடத்துவதற்கு புங்குடுதீவு சைவ மங்கையர் கழகத்தினரும் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர்.

## சீனபற்றி ரூபேர்ட்

கொம்பனித்தெரு, வெள்ளி

''சீனவில் முஸ்லிம்கள் துன்புறுத்தப் படுகிருர்கள் என்பதில் எவ்வித உண்மையும் கிடையாது. சீனவின் பல இடங்களுக்கும் சென்று பார்த்து எல்லாவற்றையும் தெரிந்து கொண்டதனலேயே இதனை உறுதியாக கூறுகிறேன்'' என்று சீனவின் இலங்கை தூதர் திரு. ரூபேர்ட் குணவர்த்தன சீன இலங்கை நட்புறவுச் சங்க ஆதரவில் செஞ்சிலுவை சங்க மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் சொன்னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுப்பிட்டி கி. ச. கூட்டத்தில் இரு அங்கத்தவர் கைகலப்பு

உடுப்பிட்டி, வெள்ளி

இரு அங்கத்தவர்களுக்கிடையே ஏற்பட்ட வாக்கு வாதம் கைகலப்பாக மாறி அடிபிடியில் முடிவடைந்த இச்சம்பவம் இங்குள்ள கிராம சபைக் கூட்டமொன்றில் நிகழ்ந்துள்ளது.

நேற்றுக்காலை உடுப்பிட்டி கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் தலைமையில் நடைபெற்ற போதே இக்கைகலப்பு நிகழ்ந்ததாம். கிராமசபைத் தலைவர் உடுப்பிட்டி கிராம சபைப் பகுதிக்கான மின்சார விநியோகத்துக்கு மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் பெறுவதென்றும், குறிப்பிட்ட சில பகுதிகளுக்கே மின்சாரம் முதல் படிவத்தில் விநியோகம் செய்யப்படுமென்றும்கூறியதைத் தொடர்ந்து, 10-ம் வட்டார உறுப்பினர் திரு. செ ஈஸ்வரலிங்கப்பெருமாள் எழுந்து தன்னுடைய வட்டாரத்திற்கு மின்சாரம் வழங்கப்படாவிடில் தனது வட்டார மக்கள் வரிசெலுத்தா இயக்கத்தை ஆரம்பித்துக் கிராமசபையைப் பகிஷ்கரிப்பார்கள் எனத் தெரிவித்தாராம்.

இச்சமயத்தில் 18-ம் வட்டார அங்கத்தவர் திரு. சோ.சிவராசா குறிக்கிட்டுப் பேசியதைத் தொடர்ந்து இரு அங்கத்தவர்களுக்கும் இடையே கடுமையான வாக்குவாதம் மூண்டதாம். ஒருவருக்கொருவர் கடும் வார்த்தைகளையும் உபயோகித்துக் கொண்டனர். தலைவர். சபையில் அமைதியை நிலைநாட்ட எடுத்த முயற்சிகள் பயன் தரவில்லை. அங்கத்தவர்களிடையே வார்த்தைப் பிரயோகம் சூடேறியதைத் தொடர்ந்து 10-ம் வட்டார அங்கத்தவரும் 18-ம் வட்டார அங்கத்தவரும் திடீர் என ஒருவர் மீது ஒருவர் பாய்ந்து தாக்கத் தொடங்கினராம். சக அங்கத்தவர்கள்பிரஸ்தாப இருஅங்கத்தவர்களையும் தொடர்ந்து சண்டையிடவிடாது தடுத்து ஆசனத்தில் அமர்த்தினர்.

'இக்கிராமசபையின் சரித்திரத்தில் இப்படியான சண்டைகள் கிடையாது. பொது மக்களின் பிரதிநிதிகள் நேர்மையாகவும், ஒழுங்கு முறைகளை அனுஷ்டித்தும் பொறுமையாக இருக்கவேண்டும்' என்று தலைவர் சபையினரைக் [illegible]

இறுதியில் கைகலப்பிலீடுபட்ட இரு கி. ச. அங்கத்தவர்களும் சபையில் மன்னிப்புக் கோரியதோடு பரஸ்பரம் தமது கடும் வார்த்தைகளையும் வாபஸ் பெற்றனர்.

## 'தமிழர்களை நியமிக்கவில்லை'

கிளிநொச்சி, வெள்ளி

'பொலிஸ் பகுதியிலுள்ள காலியான பதவிகளுக்கு தமிழர்கள் நியமிக்கப்படவில்லை என்ற மனத்தாங்கலும் குறையும் தமிழ் மக்களிடையே பரவலாகஇருப்பதை உங்கள்கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன்' என்று கிளிநொச்சித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:- தற்பொழுது உயர் பதவியிலிருக்கும் உயர்ந்த பொலிஸ் அதிகாரிகள் தமிழ் பேசும் மக்களை ஒதுக்க பழக்கப்பட்டவர்கள். அத்துடன் அக்காரணத்தினுலேயே முன்னைய அரசாங்கம் அவர்களுக்கு பிரதிஉபகாரமாக உயர்ந்த பதவிகளை வழங்கியது.

ஆனால் தங்கள் அரசாங்கம் பதவிக்கு வந்தும் இவ்வதிகாரிகள் முன்னையநாள் அரசாங்கத்தின் கெடுபிடிக் கொள்கைகளையே கையாளுகின்றனர் இதன்காரணமாக பொலிஸ் பகுதியில் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதன்காரணமாக தற்பொழுது பொலிஸ் பகுதியிலுள்ள பதவிகளுக்கு சிங்களவர், தமிழர், பிற இனத்தவர் எத்தனை பேர் விண்ணப்பம் செய்தார்களென்பதையும்பதவிகளுக்கு எத்தனை தமிழர், சிங்களவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்களென்பதையும் அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றேன்.

## மாதகல் வென்றது

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம் விளையாட்டுக் கோஷ்டிக்கும், மாதகல் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே சிநேக பூர்வமாக நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் மாதகல் கோஷ்டி பன்னிரண்டு ஓட்டங்களால் வெற்றி பெற்றது. போட்டி மாதகலில் [illegible] பெற்றது.

## 'கள்ளக்குடியேற்றமே பிரச்னைகளுக்கு காரணம்'

களனி, வெள்ளி

'கள்ளக்குடியேற்றக்காரர்களுக்குப் புகலிடமும், தொழில் வாய்ப்பும் அளிக்கும் பிரஜைகள் யாவரையும் இந்நாட்டின் துரோகிகளாகக் கருதுங்கள். அவர்களது சகல உடைமைகளையும் சுவீகரித்து, அவர்களுடைய குடியுரிமைகளைத் திருப்பிப்பெற சட்டத்தை உடனடியாக மாற்றுங்கள்.'

இவ்வாறு, களனி எஸ். எஸ். ஸி. சித்தி பெற்ற இளைஞர்சங்கம், பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளது.

மிகக் குறைந்த ஊதியத்துக்கும் வேலைசெய்யத்தயாராகவிருக்கும் இக்கள்ளக் குடியேற்றக்காரரினுலேயே நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டமும், பொருளாதாரப் பிரச்னைகளும் உச்சநிலைக்கு உயர்ந்துள்ளதாக அம்மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் பலவிதமான நோய்கள் பரவுவதற்கும் இவர்களே காரணம் என்றும் குறிப்பிடும் இம்மகஜர் இவர்களுக்குப் புகலிடமளிக்குப் ஏஜெண்டுகளுக்கும், பிரஜைகளுக்கும் அரசாங்கம் கடுமையான தண்டனை வழங்குவதன் மூலம் பிரச்னை ஓரளவு தீர்க்கப்படலாமெனக் கூறியுள்ளது.

## சர்வ கட்சி அரசாங்கம்

கொழும்பு, வெள்ளி

நாட்டின் உணவு, பொருளாதாரகஷ்டங்களைநீக்கவும் தேசிய ஒற்றுமையைப் பாதுகாக்கவும் சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க முன் வருமாறு ஸ்ரீ லங்கா வாலிப முன்னணி, பிரதமமந்திரியையும், எதிர்க்கட்சித் தலைவரையும் ஒரு கடிதத்தில் கேட்டுள்ளது.

## இராணுவ தாக்குதல் வழக்கு
### மே மாதம் விசாரணை

முல்லைத்தீவு, வியா.

முல்லைத்தீவு வாசிகளான வீ. முருகேசு, மு. இராசையா, க. பாலசுப்பிரமணியம் ஆகியோரை 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி இரவு தாக்கி பலத்த காயத்தை ஏற்படுத்தியதாக முல்லைத்தீவில் முகாமிட்டிருந்த இராணுவச் சிப்பாய் கோவிலாம்பிள்ளை பாலச்சந்திரன் மீது முல்லைத் தீவுப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். பரமகுரு முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிபதி தான் அடையாள அணிவகுப்பை நடத்தியதாகவும் இவ்வழக்கை கூட்டு நீதிபதி விசாரணை செய்யும் பொருட்டு மே மாதம் 9ம் திகதிக்கு ஒத்தி வைப்பதாகவும் கூறி வழக்கை ஒத்தி வைத்தார்.

## கார்—சைக்கிள் விபத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

மானிப்பாய்வீதியில் ''ஈழநாடு''க்கு முன்பாக நேற்று மாலை ஒருகாரும் சைக்கிளும் மோதிக்கொண்டதில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வீரசிங்கம் என்பவர் காயமடைந்தார். தலையில் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

## 'காசநோயை தடுக்க.....'

கோண்டாவில், வெள்ளி

''ஒவ்வொருவரும் பாதுகாக்கப்பட்டால்தான் எல்லோரும் பாதுகாக்கப்படுவார்கள் என்ற உண்மையை உணர்ந்து பயங்கர வேகத்தில் பரவிவரும் காசநோயைத் தடுப்பதற்கு பொதுமக்களும், பள்ளிக்கூடங்களும் அதிக அக்கறை எடுக்கவேண்டும்.''

இலங்கைத் தேசிய காசநோய் தடுப்பு இயக்கத்தின் கோப்பாய் கிளை செயலாளர் திரு. இராசரத்தினம் விடுத்திருக்கும் ஓர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கி.மு.சங்கக் கூட்டம

முல்லைத்தீவு, வியா

அம்பலவன் பொக்கணை கிராம முன்னேற்றச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் முல்லைத்தீவுப் பிரிவுக் காரியாதிகாரி திரு.கா. தயாபரன் தலைமையில் நடைபெற்றது. காரியாதிகாரியும், முல்லைத்தீவு கி. மு. ச. அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. அருள்நாயகமும் உணவு உற்பத்தியில் கி.மு. சங்கத்திற்குப்பங்குஎன்பது, பற்றி எடுத்துரைத்தனர்.

கீழ்க்காணுவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. இ. சபாரத்தினம். உபதலைவர்: திரு. க. சுப்பிரமணியம், காரியதரிசி திரு த. நிதராமவீரலிங்கம், உபகாரியதரிசி: திரு. க. கனகரத்தினம், தனதிகாரி: திரு. த. வேலுப்பிள்ளை.


கட்டிட ஒப்பந்தக்காரர்களுக்கு

ஓர் நற்செய்தி

எங்களிடம் குறைந்த செலவில் சிறந்த முறையில் கட்டிடமேல் கூரை இரும்பு வேலைகள், இரும்பு கேட், கிரில்கள், பைப்பிட்டிங், வாட்டர்டேங் [நீர்த்தாங்கி] வெல்டிங், வார்ப்பு வேலைகள், கூரைசீட், ஆணி முதலியவைகள் உடனுக்குடன் குறிப்பிட்ட தவணைக்குள் செய்து கொடுக்கப்படும்.

ஒருமுறை நேரில் எங்களிடம் தொடர்பு கொண்டு உங்களின் ஆதரவை நல்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.



மகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
அன் இன்டஸ்றீயல் என்ஜினியரிங்வேக்ஸ்
105, ஸ்ரான்லிறேட், யாழ்ப்பாணம்.



கலங்கள் வேறு....
உள்ளடக்கம் ஒன்றே.




இடதுபுறத்தில் காணப்படுவது போன்ற புதிய பார்க்கர் சூப்பர் குயிங் காகிதக் கலங்கள் பலவற்றை நீங்கள் விரைவில் காண்பீர்கள். உங்களுக்கு பரிச்சயமான பழைய கலங்களிலும் பார்க்கர் சூப்பர் குயிங் கிடைக்கும் தான். எந்தக் கலத்தைத் தேர்ந்தெடுத்தாலும், கழிவுப் பொருள்களைக் கரைப்பதும் எழுதும்போதே பேனாவைத் துப்புரவு செய்வதுமாகிய சோல்வ் - எக்ஸ் என்னும் சேர்மானப் பொருள் கொண்ட ஒரே மையாகிய பார்க்கர் சூப்பர் குயிங் உங்களுக்குக் கிடைக்கும்.




எல்லாப் பேனுக்களுக்கும் சிறந்த மை இதுவே.

மகாராஜா ஓர்கனிசேஷன் லிமிட்டெட், பங்கசால் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### அறிவித்தல்

பௌத்த—இந்து புது வருட தேசியதின விழா வாண வேடிக்கைப்போட்டி 14-4-67.

எதிர்வரும் பௌத்த—இந்து புதுவருட தினத்தன்று கிளிநொச்சி ஹெட்றிக்கோ மைதானத்தில் வாணவிளையாட்டுப்போட்டி நடைபெறும். இப்போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு ரொக்கப் பரிசும் சான்றிதழும் வழங்கப்படும்.

எனவே இப்போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் 7-4-67 க்கு முன்னதாகப் பொலிஸ் அதிபர், பொலிஸ் நிலையம், கிளிநொச்சி என்னும் முகவரிக்கு மனுச்செய்யவும். 1720

### நகை ஏல விற்பனை

நிவித்திகலை 37 நி. கடையில் அடைவுபிடிக்கும்யாழ்ப்பாண ஸ்டோரில் 16-10-64 முதல் 31-3-67 வரை அடைவு வைத்து திருப்பப்படாத தங்கம் பொன் நகைகளை 1967-ம் வருடம் ஏப்ரல் 15-ம் திகதி காலை 9 மணிக்கு ஏலத்தில் விற்கப்படும்.

பி. வெங்கடேசன்
ஏலத்தார்.

1717


**REGAL - JAFFNA**
Daily at 4-45, 7-00, 9-45
Jean Marais
Mylene Demongeot
in
**FANTOMAS**



**நியூ காலிங்கன்**
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம். ஜி. ஆர்.
நடித்த
**தெய்வத்தாய்**


### ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்

நாரந்தனை, வெள்ளி

காரை நகர் ஊரிக்காட்டைச் சேர்ந்த வேலன் காந்தி என்பவர் கழுத்தில் வெட்டுக் காயத்துடன் ஊர்காவற்றுறை அரசினர்வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வேலன் காந்திக்கும் இன்னொருவருக்கும் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியதாக பொலிஸ் விசாரணையின் போது கூறப்பட்டது.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிஸார் தாமோதரி பொன்னம்பலம் என்ற நபரைத்தேடிவருகின்றனர்.

### பஸ்சேவை சீர்கேடு

நாரந்தனை, வெள்ளி

கடந்த சில நாட்களாக நெடுந்தீவில் பஸ்சேவை, சீர்கேடடைந்துள்ளது. இந்த பஸ்சேவை சீர்கேட்டினுல் பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி பலமுறை சம்பந்தப்பட்டவர்களுக்குப். புகார் செய்திருந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.


**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
வைஜயந்திமாலா
நடித்த
**அதிசயப்பெண்**



**MANOHARA**
JAFFNA
Daily at:
10-30, 4-45, 7-00, 9-45 P.M.
Alfred Linch,
Diana Dores
in
WEST II
(Adults only)


### ஐயரைத் தாக்கியதாக வழக்கு

சாவகச்சேரி, வெள்ளி

''சம்பவதினமிரவு கோவிலில் பூஜை முடித்து இரவு 8 மணிக்கு சைக்கிள்ல் வீடு திரும்பும்போது எதிரிகள் மூவரும் என்னை வழிமறித்து சைக்கிளிலிருந்து விழுத்தி, இழுத்துச் சென்று தாக்கினர். மூவரும் என்னைத் தாக்கியபோது நான் முகம்குப்புற விழுந்த நிலையில் இழுத்துச் செல்லப்பட்டதால் யார் யார் எவ்விடங்களில் அடித்தனர் எனக்கூற முடியாமலிருக்கிறது.''

துன்னாலையைச் சேர்ந்தவரும் கொடிகாமம் மருதடிப் பிள்ளையார் அர்ச்சகருமான வை சுப்பிரமணிய ஐயரைத் தாக்கிக்காயப்படுத்தியதாக குற்றஞ்சாட்டித் தொடரப்பட்டுள்ள வழக்கில் அவர் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு சொன்னர்.

இவ்வழக்கில்கொடிகாமம் வாசிகளான பி. செல்லையா, ஏ. செல்லையா, என். செல்லையா ஆகிய மூவரும் வை. சுப்பிரமணியஐயரைத் தாக்கிக் காயப்படுத்தியதாகவும் சமயத்துக்கு முரணான வகையில் ஐயரை அவமதித்து அவரது பூநூலை அறுத்ததாகவும் சாவகச்சேரிப்பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது.

மாஜிஸ்திரேட் எதிரிகள் மூவரையும் குற்றவாளிகளாகக்கண்டு மூவரையும் தலா ரூபா 250 பிணையில் செல்லும்படியும் ஏப்ரல் 4-ம் திகதி தண்டனைவழங்குவதற்கு நீதிமன்றத்தில் ஆஜராகும்படியும் உத்தரவிட்டார்.

### வீட்டுத் தோட்டப் போட்டி

புன்னலைக்கட்டுவன், வெள்ளி

இலங்கைப் போஷணைத் திட்டத்தினரால் நடைமுறையில் இயங்கிவரும் திருநெல்வேலி, மத்திய ஸ்தாபனத்தில் அடங்கியுள்ள பகுதிகளில்உள்ள நிரந்தரவாசிகளுக்கான வீட்டுத்தோட்டப் போட்டியொன்று அடுத்தமாதம் 10-4-67 தொடக்கம் 10-7-67 வரை நடைபெறும்.

திருநெல்வேலி, உரும்பிராய், ஊரெழு, கோப்பாய் ஆகிய இப்பகுதிகளிலுள்ள மாணவரும் இப்போட்டியிற் பங்குபற்றலாமென ஒழுங்காளர் ஒரு சுற்றறிக்கை விடுத்துள்ளனர்.

### நிர்வாகிகள் தெரிவு

கோண்டாவில், வெள்ளி

தாவடி தெற்கு பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் சங்கமண்டபத்தில் திரு. எம். எஸ். தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: ஆ. நடராசா, உபதலைவர்: டாக்டர் த. அ. சுப்பிரமணியம், காரியதரிசி; க. சி. செல்லத்துரை.

## வரி விளம்பரம்

### கல்வி

வகுப்புகள்:

ஜி. சி. ஈ. கலை, விஞ்ஞானம், வர்த்தகம் பயிற்றப்பட்ட பட்டதாரிகள் மூலம் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்கு நூறு வீதம் சித்தி அடைகின்றனர். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/ பிரதான வீதி, முள்ளியவளை. 1675

வகுப்புகள்:

ஜி. சி. ஈ. உயர்தரம் கலை/ வர்த்தகம் விசேட பட்டதாரி ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். விடுதி வசதிகள் உண்டு. ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி/ 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 1674

வகுப்புகள்:

வர்த்தக தராதரப் பத்திரப் பரீட்சை பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் வகுப்புகள் நடாத்தப்படும். பெண்களுக்குப் பிரத்தியேக வகுப்புகள். ஐக்கிய கலாசாலை, நெல்லியடி, கரவெட்டி. 1673

வகுப்புகள்:

ஆங்கிலம்/ தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், வர்த்தகஎண் கணிதம் வகுப்புகள் சிறப்பாக நடாத்தப்படுகின்றன. தாமதியாது உடன் சேருங்கள். ஐக்கிய கலாசாலை. 1672

வகுப்புகள்:

தட்டெழுத்து சுருக்கெழுத்து தமிழில் ஆங்கிலத்தில். கணக்குப் பதிவியல் சிங்களம் ஆங்கிலம் கணிதம். ஜி. சி. ஈ. சாதாரணம் கலை, விஞ்ஞானம், வர்த்தகம். மோட்டார் மெக்கானிசம். தினசரி காலை மாலை வகுப்புகள். யாழ். கல்லூரி, 426, ஆஸ்பத்திரி ரோட்டு, யாழ்ப்பாணம். பெண்கள் கிளை: 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1671

வகுப்புகள்:

யாழ். கல்லூரி - இரவு வகுப்புகள். தினசரி 6-30 தொடக்கம் 9 மணிவரை. அதிகாலையிலும் போயா நாட்களிலும் வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். எல்லாப் பாடங்களும் படிக்கலாம். பள்ளி மாணவர்களுக்கு விசேஷ வகுப்புகள். யாழ். கல்லூரி, 29, பருத்தித்துறை ரோட்டு, யாழ்ப்பாணம். 1670

### விற்பனைக்கு

வீடும் காணியும்

காங்கேசன்துறைத் துறைமுகம், புகையிரத நிலையம், நடேஸ்வரக்கல்லூரி. ஆகியவற்றிற்கு மிக அணித்தாக வீட்டுடன் கூடிய சுமார் 3 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு S. துரைராசலிங்கம், கண்டி ரோட், கிளிநொச்சி. 1677

தோட்டம்:

இளந் தென்னங்கன்றுகளைக் கொண்ட சுமார் 20 ஏக்கர்வரை பகுதியாகத் தோட்டமாக்கப்பட்ட, சுமார் 46 ஏக்கர் நிலம் பளைப் பகுதியில், கண்டி ரோட்டில் இருந்து சுமார் 400 யார் தூரத்திற்குள் புலோப்பளையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு S. துரைராசலிங்கம், கண்டி ரோட், கிளிநொச்சி. 1678

### தேவை

ராக்ரர் சாரதி:

நேர்மையான ராக்ரர் [Tractor] சாரதி உடனடியாகத் தேவை. நல்ல சம்பளம். உடன் நேர்முகமாகத் தொடர்பு கொள்ளவும். M. K. சின்னத்தம்பு, தபால் கந்தோர் வீதி, சுண்டிக்குளி. 1679

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பரிபூரணனந்தர், J. P., கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விஞ்ஞானக் கண் காட்சி

புன்னலைக்கட்டுவன், வெள்.

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்தின் ஆதரவில் யாழ்ப்பாணத்தில் நடக்கவிருக்கும் விஞ்ஞானக் கண்காட்சியில் பல கல்லூரிகள் பங்குபற்றுமென்றும், விஞ்ஞான மாநாட்டில் பிறநாட்டு விஞ்ஞான ஆசிரியரின் கருத்துக்களும் பரிமாறப்படுமெனவும் தெரிகிறது. இக் கண்காட்சி இரண்டாவது முறையாக நடப்பது குறிப்பிடத்தக்கது.

### மயிலிட்டி வெற்றி

பலாலி, வெள்ளி

மயிலிட்டி விளையாட்டுக் கழகத்திற்கும் வதிரி விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் காங்கேசன்துறைப் பட்டினசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மயிலிட்டி, வதிரிவிளையாட்டுக் கழகத்தை [6-1] கோல்களால் தோற்கடித்தது.

திரு. எஸ். உலகப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

### வேலணையில் நெசவுநிலையம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

தீவுப்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவு சமாசம் வேலணையில்கைத்தறி நிலையம் ஒன்றைஅடுத்தமாதத்தில் ஆரம்பிக்கவிருக்கிறது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டதாகசமாசத் தலைவர் திரு. ப. கதிரவேலு தெரிவித்துள்ளார்.


**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்] **ராஜ்** [நீர்கொழும்பு]
தினசரி பி.ப. 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணிக்கு
போயா முன்தினம், போயாதினம்,
விடுமுறை நாட்களில் காலை 10-30 மணிக்கு

வியப்பு, திகைப்பு,
விறுவிறுப்பு
அனைவரையும் மகிழ்விக்கும்
அற்புதப் படைப்பு
தாய்ப்பாசம், அன்பு
அனைத்துக்கும் ஓர்
எடுத்துக்காட்டு.



**எம். ஜி. ஆர். — சரோஜாதேவி**
எம். ஆர். ராதா, நம்பியார், நாகேஷ்,
மனோரமா, கீதாஞ்சலி, பண்டரிபாய்
நடிக்கும்
அன்னை பிலிம்ஸ்
# தாயின் மடியில்

**2-வது வெற்றி வாரம்**
கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணு [திருமலை]
மற்றும் பல திரைகளில்
**இருவல்லவர்கள்**





**ஸ்பிறிங் கட்டில்**
[இறக்குமதிசெய்யப்பட்டஸ்பிறிங் பொருத்தியது]
**முற்பணம் ரூபா 60/-**
**மாதாந்தம் ரூபா 15/-** மாத்திரம்
1 1/2 வருடங்களுக்கு
மற்றும் தளபாடங்களையும்
இதேவித தவணை முறைகளில்
பெற்றுக் கொள்ளலாம்.
**பாஷன் பேணிஷிங் பலெஸ்**
57, ஸ்ரான்லி ரோட், — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம்

# 'இந்தியாதிரும்புவோர்பிரச்னை தேசிய ரீதியில் தீர்க்கப்படும்'

## தேசாய்க்கு சக்ளா பதில்

புதுடில்லி, மார்ச் 31

''சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கையை விட்டுச் செல்ல விரும்பாத மக்களுக்கு இந்தியப்பிரஜா உரிமையை வழங்குவதற்கு வழி வகுத்துள்ளது'' என்று முன்னாள் இலங்கையில் இந்திய ஸ்தானிகராகக் கடமையாற்றியவரும், தற்பொழுது சுதந்திரக் கட்சி அங்கத்தவருமான 'திரு. சி. சி. தேசாய் லோகசபையில் பேசும் பொழுது குறிப்பிட்டார். இலங்கை-இந்திய ஒப்பந்தம் பற்றிய விவாதத்தின்போது பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நாடற்றவர் களெனக்கருதப்படுவோர் காலக் கிரமத்தில் இலங்கைப் பிரஜைகளாகியிருப்பார்கள், ஆனால் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இதற்குத் தடைவிதித்து விட்டது.

இவ் ஒப்பந்தம் செய்து கொண்டமையால் இந்தியா துன்பத்தையே வரவழைத்துள்ளது.

### சக்ளா பதில்

''காலஞ்சென்ற லால்பகதூர் சாஸ்திரி இவ் ஒப்பந்தத்தின் மூலம் நாட்டு மக்களுக்குப் பெரிய நன்மை செய்துள்ளார். இதனை நாம் பாராட்டாமல் இருக்கமுடியாது'' என்று திரு. தேசாயின் கூற்றுக்குப் பதிலளிக்கையில் வெளிவிவகார அமைச்சர் திரு. சக்ளா தெரிவித்தார்.

தொடர்ந்து சக்ளா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

இந்தியாவிற்கு ஒரு வரும் கட்டாயத்தின் பேரில் நாடு கடத்தப்படமாட்டார்கள் என நான் அறிகிறேன். அத்துடன் கொழும்பில் ஒரு இணக்கச்சபை நியமிக்கப்பட்டு விரும்பியவர்கள் இலங்கையைவிட்டுச் செல்வதற்கான மனுக்களைப் பரிசீலனை செய்துவருகின்றது. இப்பிரச்னை ஒரு தேசியப் பிரச்னையாகக் கருதப்பட்டு இங்கு வருபவர்களின் நிலைமை சீராக்கப்படும். இப்பிரச்னை கேரள, சென்னை அரசாங்கங்களினால் பரிசீலனை செய்யப்படும் என்று எவரும் எண்ணிவிடக் கூடாது. இலங்கை அரசாங்கம் இதுசம்பந்தமாக நல்லெண்ணத்துடனும் அனுதாபத்துடனும்நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நாடு கடத்தப்படுபவர்கள் தற்பொழுது இருக்கும் நிலையிலும்பார்க்கச் சிறப்புடன் வாழ்வார்கள். இதில் சந்தேகமில்லை.

இந்திய வெளிவிவகார மந்திரி திரு. சக்ளா சிறிமா—சாஸ்திரி ஒப்பந்த அமுல் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடாத்த விரைவில் இலங்கைக்கு வருவாரெனத் தெரியவருகிறது.

---

## வாரமலரில் புதியஅம்சங்கள்

### யாத்திரை கடிதங்கள்

பத்திரிகைத் துறையில் 40 ஆண்டுகள் கண்ட உண்மை அனுபவங்களை காலஞ்சென்ற தமது அருமை மகளுக்கு 'யாத்திரை கடிதங்கள்' மூலம் சுவைபட எழுதுகிறார் அவர் தந்தை.

### காலம் மறக்காத கவிஞன்

அமரகவி பாரதியார் வாழ்வில் நிகழ்ந்த, இதுவரை வெளிவராதஇன்ப, துன்ப நிகழ்ச்சிகளை அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. சு. சண்முகம் எம். ஏ. எழுதும் வரலாற்றுக் கட்டுரையில் காணலாம். இந்த இரு புதிய அம்சங்களும்

**2-4-67**

**'ஈழநாடு'**

வாரமலரில் ஆரம்பமாகின்றன

மற்றும்

- O சிறுகதை,
- O சித்திரைச் சித்திரம்,
- O ந. சி. க. எழுதும் திராவிடர் யார்?,
- O கதிரவன் எழுதும் காலச்சக்கரம்
- O 'சட்டம்பியார்' எழுதும் 'தமிழரின் கல்விநிலை'
- O கலைஅரங்கம், உலக மேடை, வாரசாரம் ஆகிய அம்சங்களும் இந்த வாரமலரில் இடம்பெறுகின்றன.

---

# மீசாலை திருட்டுவழக்கு

சாவகச்சேரி, வெள்ளி

''சம்பவதினமிரவு கதவுகள்சாத்தி நித்திரைக்குப் போனேன். இரவு ஒருமணிக்கு கதவு உடைக்கும் சத்தம் கேட்டபோது நான் எழுந்துநின்று தலைவாசலில் ரோச்லைற் அடித்தேன். அங்கு மூவர் நின்றனர். ஒருவர் கத்தியுடன் நின்றார். முதல் எதிரி கத்தியுடன் என்னைத்துரத்தினர். நான் 'ஐயோ!' எனக் கத்தியபடி ஓடினேன். முதல் எதிரியும் மற்றையோருமாக என்னைத் துரத்திப் பிடித்தனர். முதல் எதிரி எனது வாயிலடித்தார். பின்னென்னை விழுத்தினர். எனது சாரத்தில் ரத்தம் தோய்ந்து போய் இருந்தது. அன்று திருடர்கள் கூரையைப் பிரித்து வந்து அலுமாரியை உடைத்து சங்கிலி, தாலிக்கொடி, காப்பு, தோடு ஆகிய நகைகளைத் திருடிப் போய் இருந்தனர். இவைகள் எனது மனைவியினதும் மகளினதுமாகும்.''

இவ்வாறு 'மீசாலை திருட்டு வழக்கு சாவகச்சேரி மஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது சாட்சியமளித்த வேலுப்பிள்ளை இராசையா என்பவர் கூறினார்.

இவ் வழக்கில் இவ்வருடம் ஜனவரிமாதம் முதலாம் திகதி கணபதி-ரத்தினம், பொன்னையா - தம்பிராசா, உட்பட மற்றும் நாலவர் மீசாலையில் வேலுப்பிள்ளை இராசையா வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசித்து ரூபா 5230 பெறுமதியான பணம் நகைகள் ஆதியனவற்றைத் திருடியதாக சாவகச்சேரிப்பொலிசாரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.

மேல்விசாரணைஏப்ரல்11ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

---

திருகோணமலைக்கடிதம்

# நிதி அமைச்சர் இன்று திருமலை வருகிறார்

## நகராண்மை கழக ஊழியர்க்கு ஒருபொழுதுபோக்குகலாசார நிலையம்

— நமதுநிருபர் து. பாலேந்திரா —

திருக்கோணமலை, வெ.

தேசிய சேமிப்பு இயக்க வாரம் ஏப்ரல் மாதம் 1-ம் திகதி தொடக்கம் திருக்கோணமலையில் நடைபெறவிருக்கின்றது. இந்த இயக்கத்தின் அங்குரார்ப்பணத்துக்குப் பிரதம விருந்தாளியாகத் தேசிய அரசாங்கத்தின் நிதிமந்திரியூ. பி-வன்னிநாயக்கா கலந்து கொள்ளவிருக்கிறார்.

### இந்தியக் கோஷ்டி திருமலையில் மோதுகிறது

அரசாங்க சேவையினரின் உதைபந்தாட்டக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டு இந்திய உதைபந்தாட்டக் கோஷ்டி ஒன்றுதிருக்கோணமலை மக்கெய்ஸர்சுற்றுமதில் விளையாட்டு அரங்கில் இலங்கை வீரர்களுடன் மோதுவதற்கென ஏப்ரல் 14ந் திகதி இங்கு வரவிருக்கிறது.

### பஸ்போக்குவரத்து வசதி

திருக்கோணமலையில் மூதூர் தொகுதியில் இருந்து நாவாய் மார்க்கமாகத் திருமலைக்கு வரும் பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து பஸ்தரிப்பு நிலையம் வரை பஸ்போக்குவரத்து வசதி செய்து கொடுக்கும்படி விடுத்த 2ம் வட்டாரத் தொகுதி அங்கத்தவர் திரு. வி. ஆர். நவரத்தினராசாவின் கோரிக்கைக்கு இணக்கம் கொடுத்து இலங்கை போக்கு வரத்துச் சபையினருக்கு துஇ பற்றி கோரிக்கை விடுவதென திருமலை நகராண்மைக் கழக மாதந்தக் கூட்டத்தில் முடிவு செய்யபமட்டுள்ளது.

### கழகத்திற்கு நிதி உதவி

திருக்கோணமலை நகராண்மைக் கழக ஊழியர்களுக்கென ஒரு பொழுதுபேக்குக் கலாச்சாரக் கழகம் தொடக்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்குத்தேவையான நிதி உதவி கொடுக்கப்பட வேண்டுமென்று திருமலை நகராண்மைக்கழகம் முடிவு செய்துள்ளது.

### 'அழையாத விருந்தாளி'

திருக்கோணமலை தேயிலை நிர்வாக ஸ்தாபனத்தில் கடமையாற்றும் ஊழியர்கட்கு ஓர் அதிர்ச்சிகாத்திருந்தது. தேயிலை ஏற்றுமதி செய்வதற்காகக் காலையில் 1ம் இலக்கக் களஞ்சியஅறையைத்திறந்து மூன்று தேயிலைப்பெட்டிகளை ஏற்றுமதியாக்க எத்தனித்த போது அப்பெட்டிகளினிடையே இருந்துவெளி வந்தார் ஒரு அழையாத விருந்தாளி. 3 1/2 அடி நீளமானதும் 2 அங்குல சுற்றளவுமுள்ள ஒரு முத்திரைப் புடையன் பாம்பு ஒன்று தான் இவர்களை வரவேற்றது. திடீரென எதிர்பாராத விதமாகக் காட்சியளித்த அந்தச் சர்ப்பத்தைக்கண்டு திகிலுற்ற போதும் யமலோகத்துக்கு அனுப்பி வைத்து விட்டனர்.

### அதிசய வால் முட்டை

திருக்கோணமலை, அன்புவழிபுரம் என்னும் இடத்தில் ஒரு கோழி அதிசய முட்டை ஒன்றை இட்டிருக்கிறது. இந்த முட்டையில் ஒரு நீளமானசெவர் போன்று பிரிந்த வடிவமுள்ளது மான ஒரு வால் இருக்கின்றது. பார்வைக்கு இந்த வால் ஓர் ஒட்டிமீனின்வால் போன்று இகிருக்ன்றது.

---

கரணவாயில்

# முடிக்குரிய காணிகளில் 25 குடும்பம்

உடுப்பிட்டி, வெள்ளி

கரணவாய் பகுதியிலுள்ள மண்டான் குடியேற்றத் திட்டத்திற்கு அருகாமையில் இருக்கும் முடிக்குரிய காணிகளில் கரணவாய் தெற்கைச் சேர்ந்த குடியிருக்கக் காணி நிலமற்ற சுமார் 25 குடும்பங்கள் குடியேறியுள்ளனர்.

இவர்கள் முன்னர் வேறு சிலருக்குச் சொந்தமான நிலங்களில் குத்தகைக்குக் குடியிருந்தனராம். தற்பொழுது பிரஸ்தாபகாணிச் சொந்தக்காரர்கள் இக்குடும்பங்களைத் தமது காணிகளிலிருந்து வெளியேற்றிய படியினாலேயே தங்குமிடமின்றி அநாதரவானநிலையில் அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகளில் தஞ்சம்புகுந்துள்ளார்கள்.

இதுசம்பந்தமாக இக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமது அநாதரவான நிலைமைபற்றியும், தங்களுக்கு நிரந்தரமாக வீடு கட்டி வசிக்கக்கூடிய முறையில் அரசாங்கக் காணிகளைப் பகிர்ந்துதருமாறும் கோரி விரிவான மகஜர்களை வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவிற்கும், வடமராட்சி காரியாதிகாரி திரு. ஏ. ஸி. விசுவநாதனுக்கும், கரணவாய் தெற்கு கிராமசேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளைக்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

---

### 'பெரிய சந்தையாக வாய்ப்பு'

அளவெட்டி, வெள்ளி

தெல்லிப்பளைக் கிராமசபையாரால் மாவிட்டபுரத்தில் அமைக்கவிருக்கும் சந்தையை இப்பகுதி விவசாயிகள் பயன்படுத்தினால் எதிர்காலத்தில் இப்பகுதியில் இது ஒரு பெரிய சந்தையாகத் திகழ வாய்ப்பு இருக்குமென தெல்லிப்பளை கிராமசபைத் தலைவர் திரு. தம்பு செல்வரத்தினம் மாவிட்டபுரத்தில் சந்தை அமைப்பது பற்றி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

மாவிட்டபுரம் கிராம சேவையாளர் திரு. ந. நடராசா பேசும்போது, அரசாங்கம் உணவு அபிவிருத்திக்குஎவ்வளவோ நன்மை செய்ய முன்வந்திருக்கும் போது விவசாயிகள் அதைப்பயன்படுத்தி நாட்டின் சுயதேவையைப் பூர்த்தி செய்ய முன்வரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

திரு. வி. நாகரத்தினம் பேசுகையில், மாவிட்டபுரத்தில் சந்தை அமைக்க தெல்லிப்பளை கிராமசபை ஏற்கனவே குத்தகைக்கு நிலம் எடுத்தும் அதை அபிவிருத்தி செய்ய முயற்சி மேற்கொள்ளாதது வருந்தத்தக்கது எனத் தெரிவித்தார்.

சந்தை அமைப்பதற்கான வேலைகளை மேற்கொள்ள 11 [illegible] தெரிவுசெய்யப்பட்டது.

---

# பளையில் பொங்கல்விழா

பளை, வெளிள்

பளைப் பகுதியில் இம்முறை பொங்கல்விழவைா சிறப்பாகக் கொண்டாடுவதற்கு பளைப்பகுதி பொலிசார் ஏற்பாடுசெய்துவருகின்றனர். இம்முறை இங்கு நடைபெறும் விழாவில் சைக்கிள்ஓட்டப் போட்டி, கட்டுரைப்போட்டி, கிராமிய கைத்தொழில்போட்டி என்பவற்றுடன் அன்று இரவு கலைநிகழ்ச்சிகளும் நடத்த ஏற்பாடுசெய்யப்படுகிறது.

### வடக்கில் மாவுக்கப்பல்

பலாலி, ஞாயிறு

காங்கேசன் துறைக்கு ''இன்ஸ்முள்'' என்ற பெயருடைய மாவு கப்பல் முதல் முறையாக இவ்வருடத்தில் இத்துறைமுகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது, 9 000 தொன் நிறையுள்ளமாவு இக்கப்பலில் வந்துள்ளது. இக்கப்பலிலிருந்து மாவு இறக்கும் வேலையை யாழ் துறைமுகத் தொழிலாளர் சமாசத்தினர் செய்கின்றனர்

### வை.எம.சி.ஏ நிர்வாகிகள்

சாவகச்சேரி, வெள்ளி

சாவகச்சேரி வை எம். சி. ஏ. நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு. ஜே. ரீ ஆர். பேரின்பநாயகம், திரு. எஸ். கே. திரவியநாயகம்; காரியதரிசி திரு. பி. தேவேந்திரன; உபகாரியதரிசி திரு. சி. சி. செல்வேந்திரன். தனாதிகாரி திரு. கே. எஸ் சரவணமுத்து.

# தற்கொலை செய்ய முயறுன்ாம்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறைஓடைக்கரையச் சேர்ந்த கந்தசாமி பெண்சரசு என்பவர் தமது வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம் பார்த்து தனது கழுத்தில் சீலையால் சுருக்கிட்டுத் தற்கொலை செய்ய முயன்றதாகபருத்தித்துறை பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியான பெண் சரசுவதியை 200 ரூபா பிணையுடன் ஒருவருட நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு உத்தரவிட்டார்.

### இடமாற்றம

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலைக் கட்டளைக்குரவர் வண. பி. யோகுப்பிள்ளை மேற்றிராணித்துவ நியமனம் பெற்றதால் திருகோணமலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### தலைமை ஆசிரியர் ஓய்வு பெறுகிறார்

பலாலி, சனி

காங்கேசன்துறைஅமெரிக்கன் மிசன் ஆங்கிலப் பாடசாலைதலைமையாசிரியர் திரு. எஸ். சுப்பிரமணியம் 19 வருட சேவையின் பின் இம்மாத பிற்பகுதியில் ஓய்வு பெறுகிறார்.

---

### காணவில்லை

லைசென்ஸ் புத்தகம்

எனது கார் லைசென்ஸ்புத்தகத்தைக் காணவில்லை. இதனைக் கண்டெடுப்பவர்கள் சி. வன்னியசிங்கம், சிங்கம் எலக்ரிக்கல் ஸ்ரோர்ஸ், கோண்டாவில் சந்திமேற்கு என்ற விலாசத்தில் கொடுத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 2368

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலே வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்196[illegible] ஏப்ரல் மாதம் 1-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org